# யா/புற்றளை மகா வித்தியாலயம்

## க.பொ.த.உயர்தரம் - இந்துநாகரிகம் - செயலட்டை – 06

## அலகு - இந்து தத்துவம் - உபநிடதம்

## வினாப்பத்திரம்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

01. பிரஸ்தான திரயம் என்றால் என்ன?
02. பிரஸ்தான திரயங்கள் எவை?
03. வேதத்தின் சாரமாக அமைந்தவை எவை?
04. உபநிடதங்கள் ஏன் வேதாந்தம் என அழைக்கப்பட்டன?
05. உபநிடதம் என்பதன் பொருள் யாது?
06. உபநிடதங்கள் ஏன் இரகசியங்கள் என அழைக்கப்பட்டன?
07. உபநிடத உரையாடல்கள் எத்தகைய உத்திகளில் வெளிப்படுத்தப்படுகின்றன?
08. பிரதானமான உபநிடதங்கள் எத்தனை?
09. சிறப்பாகக் குறிப்பிடப்படும் உபநிடதங்கள் எத்தனை? அவை எவை?
10. உபநிடதங்கள் எழுந்த காலம் யாது?
11. உபநிடதங்கள் எழுந்த காலம் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?
12. செய்யுள் நடையில் அமைந்த உபநிடதங்கள் எவை?
13. கிரியைகளுக்கு எதிர்நிலையாக எழுந்த இந்து தத்துவ இலக்கியம் எது?
14. உடம்பை விட்டுப் பிரிந்த பின் ஆன்மாவின் நிலைபற்றிக் கூறும் உபநிடதம் எது?
15. மேலான உண்மைப் பொருளின் தன்மை பற்றிக் கூறும் உபநிடதம் எது?
16. "என்னைத் தீமையிலிருந்து நன்மைக்கு இட்டுச் செல்வாயாக" எனக் குறிப்பிடும் உபநிடதம் எது?
17. உபநிடதம் பிரம்மம் என்பதற்குக் கொடுக்கும் விளக்கம் யாது?



Prepared by : Mrs. S. Suresh

VadaZICTEC

18. “சிலந்தியானது தன்னிடமிருந்து நூலை உண்டாக்கி அதைப் பற்றி நிற்கிறது அது போலவே பிரம்மம் தன்னிடமிருந்து உலகைப் படைத்துள்ளது” எனும் கருத்தை உணர்த்தும் உபநிடதம் எது?

19. “எள்ளில் எண்ணெய் உள்ளடக்கி இருப்பது போலவும் தயிரில் நெய் போலவும் விறகில் தீ போலவும் பிரம்ம தத்துவம் மறைந்துள்ளது எனக் கூறும் உபநிடதம் எது?

20. உபநிடத மகா வாக்கியங்கள் எவை?

21. பிரம்மத்தை அடையும் வழிகளாக உபநிடதங்கள் எவற்றைக் குறிப்பிடுகின்றன?

22. பரவித்யா என்பது யாது?

23. அபரவித்யா என்பது யாது?

24. ஆன்மா ஐந்து வகையான கவசங்களால் மூடப்பட்டு அதனுள்ளே வீற்றிருக்கின்றது எனக் குறிப்பிடும் உபநிடதம் எது?

25. “பற்றுக்களுடன் வாழும் ஒருவன் அப்பற்றுக்களை அறுக்க அப்பற்றுக்களுடனேயே பிறக்கின்றான்” எனக் குறிப்பிடும் உபநிடதம் எது?

26. “என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்” என்பதனூடாக வெளிப்படுத்தப்பட்டது யாது?

27. உத்தாலகருக்கும் சுவேதகேதுவுக்கும் இடையிலான உரையாடல் இடம்பெறும் உபநிடதம் எது?

28. யமனுக்கும் நசிகேதனுக்கும் இடையிலான உரையாடல் நிகழும் உபநிடதம் எது?

29. பிரம்மம் விளக்கப்பட்டுள்ள மூன்று தன்மைகளும் எவை?

30. உபநிடத உரையாடல்களில் வலியுறுத்தப்பட்ட விடயம் யாது?

31. “சத்யத் ஜயதே” எனக் குறிப்பிடும் உபநிடதம் எது?

32. “வண்டியிலே கட்டப்பட்ட குதிரையினைப் போன்று சரீரத்திலே ஆன்மா கட்டப்பட்டுள்ளது” எனக் குறிப்பிட்ட உபநிடதம் எது?

33. சைவ சமயத்தவர்களுக்குத் தனிச்சிறப்பு வாய்ந்த உபநிடதம் எது?

34. குருகுலக் கல்வியின் முடிவில் குருவினால் சீடனுக்குக் கூறப்பட்ட ஒழுக்கவியல் சார்ந்த அறிவுரைகள் அடங்கியுள்ள உபநிடதம் எது?





VadaZICTEC

35. உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள ஞானம் பெறும் மூன்று வழிகளும் எவை?

36. சீவன் முத்தி என்பது யாது?

37. விதேக முத்தி என்பது யாது?

38. பஞ்சமா பாதகங்கள் வலியுறுத்தப்படும் உபநிடதம் எது?

39. உபநிடதங்கள் அனைத்திலும் மிகச்சிறிய உபநிடதம் எது? எத்தனை சுலோகங்களைக் கொண்டுள்ளது?

40. உபநிடதங்களின் மறுபெயர்கள் எவை?

VadaZICTEC



Prepared by : Mrs. S. Suresh